பொருளியல்

க.பொ.த உயர்தரம்

கருத்திரங்கு

தொடர் - 05

2016

தேர்ச்சி - 06 : பொதுவிலைமட்டம்

தேர்ச்சி - 07 : பணமும் வங்கியும்

சிறு குறிப்புக்கள்

மாதிரி வினா விடைகள்

புள்ளித்திட்ட விளக்கம்

பல்தேர்வு வினாக்கள்

S.Jeyakumar

(B.A(Hons) ECO SPI, M.A.in Eco, P.G.D.E)

யா/வயாவிளான் மத்திய கல்லூரி

1. பொதுவிலைமட்டம்

பொதுவிலைமட்டம்

- ஒரு நாட்டின் பொருள்கள் சேவைகளின் சராசரி விலையை பொதுவிலை மட்டம் எனப்படும்.
- பொதுவிலை மட்டம் ஓர் நுகர்வோர் விலைச்சுட்டெண் மூலம் அளவிடப்படும்.

இலங்கையில் பொதுவிலை மட்டத்தினை அளவிடுவதற்கு பயன்படும் விலைச்சுட்டெண்கள்

- கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் [2006/07=100]
- உற்பத்தியாளர் விலைச்சுட்டெண். [2010=100]
- தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண். [2013=100]
- உள்ளாந்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கி [2010=100]

விலைச்சுட்டெண்

- குறிப்பிட்ட ஒரு ஆண்டை அடியாண்டாகக் கொண்டு குறித்த ஒரு நாட்டிலுள்ள மக்கள் அனைவராலும் பொதுவாக நுகரப்படுகின்ற பொருள்களின் சேவைகளின் சராசரி விலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை அளவிடுகின்ற குறிகாட்டியை விலைச்சுட்டெண் என்பர்.

தேவைப்படும் விடயங்கள்

1. அடியாண்டைத் தெரிவு செய்தல்.
2. பண்டங்களின் கூடையைத் தெரிவு செய்தல்.
3. பண்டங்களின் நிறையைத் தெரிவு செய்தல்.
4. பிரதிநிதித்துவப்படுத்தும் நுகர்வோரைத் தெரிவு செய்தல்.
5. பண்டங்களின் விலையை கருத்தில் கொள்ளுதல்.

பண்டம்	அடியாண்டு ஆண்டு			நடப்பு ஆண்டு		
	விலை (P_0)	நிறை (Q_0)	P_0Q_0	விலை (P_1)	நிறை (Q_0)	P_1Q_0
A	40	41.0	1640	45	41.0	1845
B	30	3.1	93	30	3.1	93
C	120	23.7	2844	130	23.7	3081
D	50	19.1	955	60	19.1	1146
E	20	13.1	262	40	13.1	524
மொத்தம்		100.0	5794		100.0	6689

அடியாண்டின் விலைச்சுட்டெண்

$$PI = \frac{\sum P_0 Q_0}{\sum P_0 Q_0} \times 100$$

$$PI = \frac{5794}{5794} \times 100$$

$$= 100$$

நடப்பு ஆண்டின் விலைச்சுட்டெண்

$$PI = \frac{\sum P_1 Q_0}{\sum P_0 Q_0} \times 100$$

$$PI = \frac{6689}{5794} \times 100$$

$$= 115.447$$

பிரமாணம் / அம்சம்	கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (CCPI)	தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (NCPI)
புவியியல் பிரதேசமும் குறிக்கப்பட்ட சனத்தொகையும்.	கொழும்பு மாவட்டத்தின் பிரதான நகரங்களிலுள்ள அனைத்து குடியிருப்பாளர்களும்	இலங்கையின் அனைத்து மாகாணங்களின் அனைத்து குடியிருப்பாளர்களும்.
அடிப்படைக் கணக்கெடுப்பு	குடியிருப்பாளர் வருமான மற்றும் செலவுக் கணக்கெடுப்பு 2006/07	குடியிருப்பாளர் வருமான மற்றும் செலவுக் கணக்கெடுப்பு 2012/13
அடியாண்டு	2006/07	2013
அடிப்படைக் காலத்தில் மொத்தச் செலவீனம்	பொருள் மற்றும் சேவைக் கூடையின் மாதாந்த மொத்தச் செலவு ரூ.27972.11	பொருள் மற்றும் சேவைக்கூடையில் மாதாந்த மொத்தச்செலவு ரூ.32142.69
பொருட் தொகுதி	373 வகையான பண்டங்களை 10 தொகுதியாக்கியுள்ளது	407 வகையான பண்டங்களை 12 தொகுதியாகியுள்ளது.
நிறைக் கட்டமைப்பு	உணவுப் பொருட்கள் செலவின் பங்கு 41.03 சதவீதமாகும்.	உணவுப் பொருட்களின் செலவின் பங்கு 44.04 சதவீதமாகும்.
விலை சேகரிப்பு மையங்கள்	கொழும்பு நகரப் பிரதேசங்களை உள்ளடக்கிய 14 விலை சேகரிப்பு நிலையங்கள்.	ஒவ்வொரு மாவட்டத்தின் நகரிலுள்ள 03 விலை சேகரிப்பு நிலையங்கள்.
கணிக்கும் நிறுவனம்	இலங்கை தொகைமதிப்பு திணைக்களம்	இலங்கை தொகைமதிப்பு திணைக்களம்

நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது

உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் (PPI)

- பொருள் சேவைகளுக்கு உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற விலைகளின் போக்கினை வெளிப்படுத்துவதாக உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் காணப்படுகின்றது.
- வேளாண்மை உற்பத்திகள் (161 வகையான பொருட்கள்) மற்றும் தயாரிப்பு, மின்சாரம், நீர்சேகரிப்பு, தூய்மையாக்கல், மற்றும் விநியோகம் ஆகியவற்றின் விலைகள் கவனத்தில் எடுக்கப்படும்.
- 2010ம் ஆண்டினை அடியாண்டாகக் கொண்டுள்ளது.
- இலங்கைத் தொகை மதிப்பு திணைக்களத்தினால் 2015 செப்ரெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இச்சுட்டெண் பயன்பாட்டுக்கு வரும்போது மத்திய வங்கியால் கணிக்கப்பட்ட மொத்த விற்பனை விலைச்சுட்டெண் செயலிழந்து போகும்.

பணவீக்கம் (Inflation)

ஒரு நாட்டின் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டு செல்லுதல் பணவீக்கம் எனப்படும்.

பணச்சுருக்கம் (deflation)

ஒரு நாட்டின் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துகொண்டு செல்லுதல் பணச்சுருக்கம் எனப்படும்.

வெளிப்படையான பணவீக்கம் (Head line Inflation)

- ஒரு நாட்டின் பொதுவிலைமட்டத்தில் ஏற்படுகின்ற உண்மையான அதிகரிப்பு வெளிப்படையான பணவீக்கம் எனப்படும்.
- இது வழமையாக பயன்படுத்தப்படும் விலைச்சுட்டெண் மூலமாக வெளிப்படுத்தப்படும்.

பணவீக்கமின்மை (disinflation)

- ஒரு நாட்டின் பொதுவிலைமட்டத்தின் அதிகரிப்பு வேகம் படிப்படியாகக் குறைந்து கொண்டு செல்லுதல் பணவீக்கமின்மை எனப்படும். (பணவீக்கவீதம் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்லும்).
- பணவீக்கமின்மை நிலவும் காலப்பகுதியில் பொருட்கள் சேவைகளின் சராசரி விலைகள் அதிகரிக்கும். ஆனால் முன்னர் அதிகரித்த வேகத்தைவிட குறைந்த வேகத்தில் அதிகரிக்கும்.

மையப் பணவீக்கம் / அடிப்படை பணவீக்கம் (Core Inflation)

- வெளிப்படையான பணவீக்கத்தில் காணப்படுகின்ற நிரம்பல் அதிர்ச்சிகள் போன்ற விலைத்தளம்பல்களை அகற்றும் பொருட்டு சிலவகைப் பொருட்களின் விலைகளை நீக்கி கணிப்பிடப்படும் விலைச்சுட்டெண்ணின் போக்கு அடிப்படைப் பணவீக்கம் எனப்படும்.

மிதமான பணவீக்கம் (Moderate Inflation)

- பணவீக்க வீதம் 5 வீதத்திலும் குறைவாக இருத்தலைக் குறிக்கும்.

பாய்ச்சல் பணவீக்கம் (Galloping Inflation)

- பொதுவிலைமட்டம் மிக வேகமாக அதிகரித்து செல்வதனைக் குறிக்கும். இங்கு பணவீக்கவீதம் 20% or 100% or 200% மட்டத்தில் இருக்கும்.

அதிவேக பணவீக்கம் (Hyper Inflation)

- மாதமொன்றிற்கு பணவீக்க வீதம் 50 வீதமாக இருத்தலைக் குறிக்கும்.

சுழல் பணவீக்கம் (Spiral Inflation)

- ஒரு நாட்டின் பொதுவிலைமட்டம் அதிகரிக்கும்போது கூலிமட்டம் அதிகரித்து மொத்த நிரம்பல் வீழ்ச்சியடைய பொதுவிலைமட்டம் அதிகரிக்கும். அதனால் மீண்டும் கூலிமட்டம் அதிகரிக்கும். இவ்வாறு மீண்டும் மீண்டும் பணவீக்கம் ஏற்படுதல் சுழல் பணவீக்கம் எனப்படும்.

$$\text{பணவீக்க வீதம்} = \frac{\text{நுகர்வோர் விலைச்சுட்டியில் ஏற்பட்ட மாற்றம்}}{\text{முந்திய வருடத்தின் நுகர்வோர் விலைச்சுட்டி}} \times 100$$

மெய் வட்டிவீதம் = பெயரளவு வட்டிவீதம் - பணவீக்க வீதம்

.....

.....

.....

இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக் கொள்ளவேண்டிய குணங்கள் எல்லாவற்றிலும் மிக மிக உயர்ந்தது பொறுமை.

கேள்வித்தூண்டல் பணவீக்கம்

- நிறை தொழில்மட்ட நிலைக்கு அப்பால் மொத்தக் கேள்வி அதிகரிக்கும்போது பொதுவிலை மட்டம் அதிகரித்தல்.



AD = C + I + G + X - M

.....

.....

.....

செலவுத்தூண்டல் பணவீக்கம்

- மொத்தக்கேள்வி மாறாதநிலையில் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும் போது மொத்த நிரம்பல் வீழ்ச்சியடைந்து பொதுவிலை மட்டம் அதிகரித்தல்.



.....

.....

.....

பணவீக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள்

கேள்வி பக்கக் காரணிகள்

1. .....
2. .....
3. .....
4. .....
5. .....
6. .....
7. .....

நிரம்பல் பக்கக் காரணிகள்

1. .....
2. .....
3. .....
4. .....
5. .....
6. .....

அமைப்புரீதியான குறைபாடுகள்

.....

.....

பண நிரம்பலுக்கும் மொத்தக் கேள்விக்கும் இடையிலான தொடர்பு.
(கெயின்சின் விளக்கம்)

- பணத்தின் விலைவட்டி ஆகும். வட்டியானது பணத்தின் நிரம்பலாலும் பணத்தின் கேள்வியாலும் நிர்ணயிக்கப்படும்.
- பண நிரம்பல் அதிகரித்தால் வட்டிவீதம் வீழ்ச்சியடையும்.
  [வட்டி முதலீட்டிற்கான தீர்மானிக்கும் பிரதான காரணியாகும் வட்டிவீதம்]

  $I = f(r)$ r = வட்டிவீதம்

  வட்டிவீதத்திற்கும் முதலீட்டிற்கும் இடையில் எதிர்த்தொடர்பு காணப்படும்.
- வட்டிவீதம் வீழ்ச்சி அடையும்போது முதலீடு அதிகரிக்க மொத்தக் கேள்வியும் அதிகரிக்கும்.



Ms↑ → r%↓ → I ↑ → AD ↑

* **பணக்கணியக் கோட்பாடு / நாணயக் கணியக் கோட்பாடு**

- ஒருநாட்டின் பணநிரம்பலுக்கும் பொதுவிலைமட்டத்திற்கும் இடையில் நேர்விகித தொடர்பு இருப்பதனை இக்கோட்பாடு வெளிப்படுத்தும்.
- $MV = PT$ M = பணநிரம்பல்
  V = பணச்சுற்றோட்ட வேகம்
- $P = \frac{MV}{T}$ P = பொதுவிலைமட்டம்
  T/Y = மெய்வெளியீடு
- V, T மாறாநிலையில் பணநிரம்பல் அதிகரிக்கும் சதவீதத்தினால் பொதுவிலை மட்டம் அதிகரிக்கும்.

பணவீக்கத்தின் பொருளாதார விளைவுகள் (பொருளியல் செலவுகள்)

- பணத்தின் மெய்ப்பெறுமதி வீழ்ச்சியடையும்.
- நிலையான வருமானம் பெறுபவர்களின் மெய்வருமானம் வீழ்ச்சியடையும்.
- சேமிப்போர் பாதிக்கப்படுவர்.
- கடன்கொடுத்தோர் பாதிக்கப்படுவர்.
- ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்து இறக்குமதி செலவுகள் அதிகரிக்கும்.
- வருமான மீள்பங்கீட்டில் நியாயமற்றமுறை காணப்படும்.
- பொருளாதாரத்தின் தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றலைப் பாதிக்கும்.
- நாணயத்தின் வெளிப்பெறுமதி தேய்வடையும்.
- தொழிற்சங்க நடவடிக்கைகளினால் நிலையற்ற பொருளாதார சூழல் ஏற்படும்.
- சார்பு வறுமை அதிகரிக்கும்.

இலங்கையின் பணவீக்க போக்கு

	2009	2010	2011	2012	2013	2014	2015
கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டிகள் (2006/07=100)	3.5	6.2	6.7	7.6	6.9	3.3	0.9

.....

.....

2. பணம்

பணம் (Money)

கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளில் பொதுமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படும் சாதனங்கள் யாவும் பணம் எனப்படும்.

Eg : தாள் உலோக நாணயம், கேள்வி வைப்பு

நாணயம் (Currency)

பரிமாற்றூடகச் செயற்பாட்டிற்காக மத்திய வங்கியினால் உருவாக்கப்பட்ட தாள் உலோகக் காசினை நாணயம் என்பர்.

Eg : 1000 ரூபா தாள் காசு, 10 ரூபா குற்றி காசு

திரவத் தன்மை

- சொத்து ஒன்றினை தாமதமின்றி மேலதிக செலவின்றி இலகுவாக பரிமாற்று ஊடகமாக மாற்றிக்கொள்ளும் தன்மையை திரவத்தன்மை என்பர்.
- பணத்தினை ஏனைய சொத்துக்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது திரவத் தன்மையாகும்.

பண்டமாற்று முறையின் குறைபாடுகள்

- இரட்டைத் தேவை பொருந்துகையின்மை
- பிரிபடாத் தன்மை
- களஞ்சியப்படுத்துவதற்கு போதிய வசதியின்மை
- பெறுமதியை அளவிடுவதற்கு பொதுவான கருவி காணப்படாமை.
- பெறுமானத் திரட்டுக்கென கருவி காணப்படாமை.
- பிற்போடப்பட்ட கொடுப்பனவுக்கு கருவி இல்லாமை

பணத்தின் பண்புகள்

- பரிமாற்றூடகமாக பொதுவாக அங்கீகரிக்கப்படல்.
- நெடுவாழ்வுத் தன்மையைக் கொண்டிருத்தல்.
- பிரிவுபடும் தன்மையைக் கொண்டிருத்தல்.
- எடுத்துச் செல்வதற்கு இலகுவாயிருத்தல்.
- ஒரே விதமான தன்மையைக் கொண்டிருத்தல்.
- பெறுமதி நிலையாக இருத்தல்.
- கள்ளப்பணம் உருவாகாத வகையில் விசேட தன்மையைக் கொண்டிருத்தல்.

பணத்தின் தொழிற்பாடுகள்

1. பரிமாற்று ஊடகமாகச் செயற்படுதல்.
2. கணக்கீட்டலகாகச் செயற்படுதல்.
3. பெறுமானக் களஞ்சியமாகச் செயற்படுதல்.
4. பிற்போடப்பட்ட கொடுப்பனவுக் கருவியாகச் செயற்படுதல்.

சட்டப்பணம்	வங்கிப்பணம்
• தாள் உலோக நாணயங்கள் • பூரணமான திரவத்தன்மையுண்டு. • மத்திய வங்கியினால் உருவாக்கப்படும். • எடுத்துச் செல்லும்போது பாதுகாப்பு குறைவு.	• வணிக வங்கிகளில் பொதுமக்களின் பெயரிலுள்ள கேள்வி வைப்புக்கள் (நடைமுறைக்கணக்கு மீதி) • காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுத்தப்படும். • உயர்ந்த திரவத்தன்மையானது ஆனால் சட்டப்பணத்தினை விட திரவத்தன்மை குறைவு.
பண்டப்பணம்	**கிட்டியபணம் / அண்மியபணம்**
• பொருள் என்றரீதியில் பெறுமதியுடையதும் பரிமாற்று ஊடகமாகப் பயன்படுத்தக் கூடியவை பண்டப் பணமாகும். Eg : கற்கள், எலும்புத்துண்டுகள், தங்கம், வெள்ளி, வைரங்கள்	• பெறுமானத்திரட்டுப் பணியை மேற்கொள்-கின்ற ஆனால் பரிமாற்று ஊடகப் பணியை மேற்கொள்ளாதபோதும் பரிமாற்று ஊடகமாக மாற்றிக் கொள்ளக்கூடிய சொத்துக்கள் கிட்டிய பணமாகும். • இது பூரண திரவச்சொத்து அல்ல. ஆனால் உயர் திரவச் சொத்தாகும். Eg : சேமிப்பு, தவணை வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், வர்த்தகப் பத்திரங்கள்
பணப்பதிலீடு	
• தற்காலிகமாக பரிமாற்று ஊடகமாகச் செயற்படுபவை பணப்பதிலீடு எனப்படும். Eg : கடனட்டை • இது பெறுமானத் திரட்டாகக் கருதப்படுவ-தில்லை. • திரவத்தன்மை மிகவும் குறைவாகும்.	

ஒரு மனிதனின் வாழ்க்கையில் நன்மை செய்தலே உண்மையான இன்பம் அளிக்கும் செயல்.

இலங்கையில் கணிப்பிடப்படும் பணநிரம்பல்கள்

1. **குறுகிய பண நிரம்பல்** (M_1) = பொதுமக்களிமுள்ள தாள் உலோக நாணயங்கள் (CP) + பொதுமக்களின் பெயரில் வர்த்தக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்பு (DDP)

2. **விரிந்த பண நிரம்பல்** (M_2) = குறுகிய பண நிரம்பல் (M_1) + பொதுமக்களின் பெயரில் வர்த்தக வங்கிகளில் உள்ள சேமிப்பு தவணை வைப்புக்கள் (TSD_{CB})

M_2 ஐ தீர்மானிக்கும் காரணிகள்

$$M_2 = NFA_B + NCG_B + CPS_{KB} + NOA_B$$

NFA_B = வங்கி முறைமையின் தேறியவெளிநாட்டு சொத்து (மத்தியவங்கி, வர்த்தக வங்கி (உள்நாட்டு வங்கித்தொழில்).

NCG_B = வங்கி முறையினால் அரசுக்கு வழங்கப்பட்ட கடன்.

CPS_{KB} = வணிக வங்கிகளால் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள்.

NOA_B = வங்கி முறைமையின் ஏனைய சொத்துக்கள்.

3. **திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பல்** (M_{2b}) = விரிந்த பண நிரம்பல் (M_2) + வதியாதோர் வெளிநாட்டு நாணயக்கணக்கு (NRFC) 50% + வதிவுடையோரின் வெளிநாட்டு நாணயக்கணக்கு (RFC)

M_{2b} ஐ தீர்மானிக்கும் காரணிகள்

$$M_2b = NFA + NDA + NOA$$

NFA = ஒன்றிணைக்கப்பட்ட வங்கி முறைமையின் தேறியவெளிநாட்டு சொத்து (மத்தியவங்கி + வர்த்தக வங்கி).

NDA = ஒன்றிணைக்கப்பட்ட வங்கி முறைமையின் தேறிய உள்நாட்டு சொத்து

NOA = ஒன்றிணைக்கப்பட்ட வங்கி முறைமையின் தேறிய ஏனைய சொத்துக்கள்.

4. மேலும் விரிந்த பணநிரம்பல் (M_4) $= M2b + RD_{LSB} + RD_{FC}$

RD_{LSB} = சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளில் பொதுமக்களின் பெயரில் உள்ள சேமிப்பு தவணை வைப்புக்கள்.

RD_{FC} = நிதிக்கம்பனிகளிலுள்ள வதிவோரின் வைப்புக்கள்

M_4 ஐ தீர்மானிக்கும் காரணிகள்

1. **நிதிமுறைமைகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்.**
   - நாணய அதிகாரசபையின் தேறிய வெளிநாட்டுச் சொத்து.
   - வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்து. (உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளும், கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளும்)
   - உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளும், பதிவுசெய்யப்பட்ட நிதிக்கம்பனிகளது தேறிய வெளிநாட்டுச் சொத்து.

2. **நிதிமுறைமைகளின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்.**
   - அரசிற்கான தேறிய கொடுகடன் (மத்தியவங்கி, வர்த்தக வங்கிகள், சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள், அரசிற்கான தேறிய கடன்)
   - அரச கூட்டுத்தாபங்களுக்கான தேறிய கொடுகடன். (வர்த்தக வங்கிகள், சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், நிதிக்கம்பனிகள் வழங்கிய தேறிய கடன்)
   - தனியார் துறைக்கான தேறிய கொடுகடன். (வர்த்தக வங்கிகள், சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், நிதிக்கம்பனிகள் ஆகியவை).

உங்கள் அம்மாவிடம் சொல்லிப் பெருமைப்பட முடியாத

எந்தவொரு செயலையும் செய்யாதீர்கள்.

உயர்வலுப்பணம் / ஒதுக்குப்பணம் / நாணயத்தளம்

- ஒருநாட்டின் பணநிரம்பலுக்கு அடிப்படையாகவுள்ள நிதிச்சொத்துக்கள் உயர்வலுப்பணம் எனப்படும்.
- இதற்குள் உள்ளடங்கியுள்ள விபரங்கள் வருமாறு :
  1. பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயம்.
  2. வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம்.
  3. மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள்.

ஒதுக்குப்பணத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

1. மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்.
   - ➔ மத்தியவங்கி அரசுக்கு வழங்கிய தேறியகடன்கள்.
   - ➔ மத்தியவங்கி வர்த்தக வங்கிகளுக்கு வழங்கிய தேறியகடன்கள்.
2. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்.
3. மத்திய வங்கியின் தேறிய ஏனைய சொத்துக்கள்.

ஒதுக்குப் பணத்திற்குள் உள்ளடங்குபவை	2015 பில். ரூபா	ஒதுக்குப் பணத்தினை தீர்மானிப்பவை	2015 பில். ரூபா
1. பொதுமக்கள் வைத்திருக்கும் நாணயம்	388.1	1. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு சொத்து	576.2
2. வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம்	103.6	2. மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டு சொத்து	97.2
3. மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள்	181.7		
ஒதுக்குப்பணம்	673.4		673.4

ஒருவனுக்கு அறிவு இருந்தும் ஆற்றல் இல்லையெனில் அவன் வாழ்வு சிறக்காது

நாணயப்பெருக்கி / பணப்பெருக்கி

- பணநிரம்பலுக்கும் ஒதுக்குப்பணத்திற்கும் இடையிலான விகிதம் பணப்பெருக்கி எனப்படும்.

$$\text{பணப்பெருக்கி (M)} = \frac{\text{பணநிரம்பல் (தொடர்புடையது) (M)}}{\text{ஒதுக்குப்பணம் (B)}}$$

Eg : 2015இல் M_2b = 4565.9 பில். ரூபா

ஒதுக்குப்பணம் = 673.4 பில். ரூபா

M_2b சார்பான பணப்பெருக்கி $= \frac{4565.9}{673.4}$

$= 6.78$

பணநிரம்பல் (M) = ஒதுக்குப்பணம் (B) X பணப்பெருக்கி (m)

பணப்பெருக்கியைத் தீர்மானிக்கும் காரணிகள்

1. பொதுமக்களிடமுள்ள நாணயத்திற்கும் மொத்தவைப்புகளுக்குமிடையிலான விகிதம் $c = \frac{CP}{TD}$ (Currency Deposit Ratio)
2. வணிக வங்கிகளின் மேலதிக ஒதுக்கு வீதம் $e = \frac{ER}{TD}$ (Excess Reserve Ratio)
3. சட்டமுறையான ஒதுக்கு வீதம் $r = \frac{RR}{TD}$ (Statutory Reserve Ratio)

$$\text{பணப்பெருக்கி} = \frac{1+c}{c+e+r}$$

Eg : வைப்புகளுக்கான நாணய விகிதம் 50%

சட்டமுறையான ஒதுக்கு விகிதம் 8%

மேலதிக ஒதுக்கு விகிதம் 2%

$$\text{பணப்பெருக்கி} = \frac{1+0.5}{0.5+0.08+0.02}$$

$= 2.5$

வினா

கருதுகோள்ரீதியான பொருளாதாரமொன்றின் பணநிரம்பல் (M) ரூபா 1500 பில்லியன் எனவும், மொத்த வங்கி வைப்புக்கள் (D) ரூபா 1000 பில்லியன் எனவும் தேவைப்படும் ஒதுக்கு வைப்பு வீதம் 10% எனவும் வங்கிகள் மிகை ஒதுக்குகளை பேணவில்லை எனக்கொள்க.

அ) இப்பொருளாதாரத்தின் பணப்பெருக்கியின் பெறுமானம் யாது?

.....

.....

ஆ) மத்திய வங்கியானது ரூ.3 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்களை வணிக வங்கிகளிடமிருந்து கொள்வனவு செய்யுமாயின் அதன் காரணமாக பணநிரம்பல் மாற்றமடையக்கூடிய உச்ச அளவு யாது?

.....

.....

* ஒரு நாட்டின் பணநிரம்பலை தீர்மானிக்கும் காரணிகள்

- ஒதுக்குப் பணத்தினைப் பாதிக்கும் காரணிகள்
  - மத்தியவங்கி அரசிற்கு கடன் வழங்குதல்.
  - மத்தியவங்கி வர்த்தக வங்கிகளுக்கு கடன் வழங்குதல்.
  - மத்தியவங்கி வெளிநாட்டு செலவாணியை கொள்வனவு விற்பனை செய்தல்.
  - மத்தியவங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள்.
  - மத்திய வங்கியின் இலாபங்களை அரசிற்கு மாற்றுதல்.
  - மத்திய வங்கியின் ஏனைய தேறிய சொத்துக்கள்.

- பணப் பெருக்கியைப் பாதிக்கும் காரணிகள்
  - வைப்புக்களுக்கான நாணய விகிதம்
  - சட்டமுறையான ஒதுக்கு விகிதம்
  - மிகை ஒதுக்கு விகிதம்

பண நிரம்பல் அதிகரிப்பதன் பொருளாதார விளைவுகள்

1. .....
2. .....
3. .....
4. .....
5. .....
6. .....

பணத்தின் கேள்வி

- குறித்த காலத்தில் பணத்தைப் பணமாக தம்மிடம் வைத்திருப்பதற்கு பொதுமக்களிடமுள்ள விருப்பம் பணத்தின் கேள்வி எனப்படும்.

பணத்தின் கேள்வியை தீர்மானிக்கும் காரணிகள்

1. வருமானம் (Y)
2. வட்டி வீதம் (r)
3. பொதுவிலை மட்டம் (P)

$MD = f(y, r, P)$

பொதுமக்கள் தமது கைவசம் பணத்தினை வைத்திருப்பதற்கான காரணங்கள்

1. கொடுக்கல் வாங்கல் நோக்கம்
2. பாதுகாப்பு நோக்கம்
3. உத்தேச நோக்கம் / ஊக நோக்கம்

கொடுக்கல் வாங்கல் நோக்கம்

தனிநபர்களின் வருமானம் பெறுதலுக்கும் செலவீட்டு நடவடிக்கைகளும் ஒன்றுக்-கொன்று பொருந்தாத காரணத் தினால் கொடுக்கல் வாங்கல் நோக்கத்திற்காக பணத்தினை மக்கள் தம்மிடம் வைத்திருத்தலை கொடுக்கல் வாங்கல் நோக்கக் கேள்வி என்பர்.

$MD_T = f(Y)$



பாதுகாப்பு நோக்கம்

- எதிர்பாராத நிலைமைகளில் ஏற்படக்-கூடிய செலவுகளை செய்வதற்காக பொதுமக்கள் பணத்தினை தம்மிடம் வைத்திருத்தலை பாதுகாப்பு நோக்க கேள்வி என்பர்.

$MD_P = f(Y)$



உத்தேச நோக்கம் / ஊக நோக்கம்

- எதிர்காலத்தில் வருமானம் உழைக்கும் நோக்குடன் நிதிச் சொத்துக்களில் முதலீடு செய்யும் நோக்கத்திற்காக பொதுமக்கள் பணத்தினை வைத்திருத்தல் உத்தேச நோக்க கேள்வியாகும்.
- இதனை தீர்மானிக்கும் பிரதான காரணி வட்டிவீதமாகும்

$MD_S = f(r)$

- வட்டிவீதத்திற்கும் உத்தேச நோக்க கேள்விக்கும் இடையில் எதிர்த்தொடர்பு உண்டு



நிதி நிறுவனங்கள்

1. **வங்கி தொழில் துறை**
   - மத்திய வங்கி
   - உரிமம் பெற்ற வர்த்தக வங்கி
   - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

2. **வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்**
   - பதிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள்.
   - கூட்டுறவு கிராமிய வங்கிகள்
   - சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கம்

3. **சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்**
   - விசேட குத்தகைக் கம்பனிகள்.
   - முதன்மை வணிகர்கள்.
   - பங்குதரகர் கம்பனிகள்
   - நம்பிக்கை கூறுகள்
   - முகாமைத்துவ கம்பனிகள்
   - சந்தை இடையீட்டாளர்கள் (ஒப்புறுதியாளர், முதலீட்டு முகாமையாளர், கடன் வசதியளிப்போர்)
   - துணிகர மூலதனக் கம்பனிகள்
   - கடன் தரப்படுத்தல் நிறுவனங்கள்

4. **ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்ககள்**
   - காப்புறுதிக் கம்பனிகள்
   - ஊழிய சேம இலாப நிதியம்
   - ஊழியர் நம்பிக்கை நிதியம்
   - அரசபணி சேமலாப நிதியம்
   - அனுமதியளிக்கப்பட்ட ஓய்வூதிய மற்றும் சேமலாபநிதியம்

3. வர்த்தக வங்கி

இலங்கையிலுள்ள வணிகவங்கிகளின் பிரதான தொழிற்பாடுகள்

1. பொதுமக்களின் வைப்புக்களை ஏற்றல்.
   - கேள்வி வைப்புக்கள்
   - சேமிப்பு மற்றும் தவணைவைப்புக்கள்
2. கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குதல்.
3. முகவர் சேவைகள் மற்றும் முதலீட்டு வங்கிச் சேவையை வழங்குதல்.
   - ஆலோசனைச் சேவை
   - ஆவணங்களைக் கொள்வனவு, விற்பனவு செய்தல்.
4. பொதுப்பயன்பாட்டுச் சேவையை வழங்குதல்.
   - வங்கிக் கட்டளைகள், பயணிகள் காசோலைகள், நாணயக் கடிதங்களை வழங்குதல்.
   - அடகு சேவையை வழங்குதல்.
   - கடன் பத்திர விநியோகம்.
   - வெளிநநாட்டு செலாவணி மற்றும் நடவடிக்கைகள்.
   - பாதுகாப்பு பெட்டக சேவை.
   - தொலைபேசி வங்கிச் சேவை, ஒன்லைன் வங்கிச்சேவை.
   - பணப்பரிமாற்று நடவடிக்கைகள்.
   - இலத்திரனியல் அட்டைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல். (ATM Card, Credit Card, Debit Card)

வர்த்தக வங்கியின் பொறுப்புக்கள், சொத்துக்கள்

1. வைப்புக்கள்
   - கேள்வி வைப்பு
   - சேமிப்பு, தவணை வைப்புக்கள்
2. செலுத்தப்பட்ட மூலதனமும் ஒதுக்கு நிதிகள் பகிரப்படாத இலாபங்கள்.
3. கடன்பாடுகள்
   - உள்நாட்டுக்கடன் பெறல்.
   - வெளிநாட்டு கடன் பெறல்.
4. ஏனைய பொறுப்புக்கள்.

I. திரவச் சொத்துக்கள்
- முதலாம் தர ஒதுக்குகள்

1. கையிலுள்ள காசு
2. மத்திய வங்கியிடமிருந்து வர வேண்டியவை.
3. உள்நாட்டு வங்கிகளிலிருந்து வர வேண்டிய நிலுவை.
4. சேகரிப்பு நிலையிலுள்ள பண விடயங்கள்.
5. கையிலுள்ள வெளிநாட்டு நாணயமும் வெளிநாட்டிலுள்ள வங்கிகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள்.

4.- முதலீட்டு பிணைகள் (2ம் தர ஒதுக்குகள்)

- திறைசேரி உண்டியல்.
- திறைசேரி முறி
- ஏனைய அரச பிணையங்கள்.

II. இலாபச் சொத்துக்கள்
கடன்களும் முற்பணங்களும்

III. நிலையான சொத்துக்கள்

வணிகவங்கிகளின் நோக்கங்கள்

1. **திரவத்தன்மையைப் பேணுதல்.**
   வாடிக்கையாளர் வங்கிமீது வைத்துள்ள நம்பிக்கையை குறையவிடாது பாதுகாத்தலை குறிக்கும்.
2. **இலாபம் உழைத்தல்**
   வங்கிகள் தொடர்ச்சியாக இயங்குவதற்குரிய செலவுகளுக்கு அதிகமான வருமானத்தினை ஈட்டுவதனை குறிக்கும்.
   - வணிக வங்கிகள் முரண்பட்ட நோக்கங்களுக்கிடையில் தனது சொத்துக்கட்டமைப்பை ஒழுங்குபடுத்திக் கொள்வதன்மூலம் சமநிலை அடையும்.

வணிக வங்கியின் கடனாக்கச் செயற்பாடு

- வணிகவங்கிகள் தமது மிகை ஒதுக்கினை கடனாக வழங்குவதன் மூலம் தம்மிடம் காணப்பட்ட தொகையைப்போல் பல்மடங்கு வைப்புக்களை உருவாக்குவது கடனாக்கம் எனப்படும்.

.....

.....

.....

.....

வணிகவங்கி முறைமையின் கடனாக்கச் செயற்பாட்டிற்குரிய எடுகோள்கள்

1. எல்லாவங்கிகளும் ஒரேயளவான காசு ஒதுக்கு வீதத்தினைக் கொண்டிருத்தல்.
2. எந்தவொரு வங்கியிலும் மிகை ஒதுக்கு இருப்பதில்லை. மிகை ஒதுக்கு முழுவதும் கடன்களாக வழங்கப்படும்.
3. ஆரம்ப வைப்புச் செய்யப்பட்ட பின்னர் வங்கி முறைமையினுள் புதிதாக பணம் உள்வருதலோ வங்கி முறைமைக்கு வெளியே பணவெளியேற்றமோ நடைபெறுவதில்லை.
4. சகல கடன்பெறுவோர்களும் தாம் பெற்ற கடன்பணம் முழுவதையும் வேறு வங்கியொன்றில் வைப்பாக இடுகின்றனர்.
5. வங்கிகளிடம் கேள்வி வைப்புக்கள் மட்டுமே உள்ளன.

Q1:

வணிகவங்கியொன்றின் ஐந்தொகைக் கணக்கு பின்வருமாறு :

பொறுப்பு		சொத்து	
• கேள்வி வைப்புக்கள்	450,000	ஒதுக்குகள்	70,000
• பங்குதாரரின் பங்குகள்	80,000	ஆவணங்கள்	60,000
		கடன்கள்	400,000
	530,000		530,000

இவ்வங்கியின் சட்டப்படியான ஒதுக்குவீதம் 10% ஆகும் எனக் கொள்க.

i) இவ்வங்கிக்கு மிகை ஒதுக்கு உண்டா? எவ்வளவு?

.....

.....

ii) இவ் வங்கியினால் கொடுக்கக்கூடிய ஆகக்கூடிய கடன் எவ்வளவு?

.....

.....

iii) இம் மேலதிக அளவைக்கடன் வழங்கிய பின்னர் வங்கியின் புதிய ஐந்தொகை எவ்வாறிருக்கும்?

.....

.....

iv) இவ் வங்கி புதியகடன்கள் பொருட்டு வழங்கிய காசோலைகள் யாவும் வங்கிக்கெதிராக தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் அதன் ஐந்தொகை எவ்வாறமையும்?

.....

.....

Q2.

அ) தாம் பெற்றுக்கொள்ளும் அனைத்து மிகை ஒதுக்களின் முழுத்தொகைக்கும் கடன்களை கொடுக்கும் வர்த்தக வங்கிகளைக் கொண்டுள்ள போட்டித்தன்மை கொண்ட வங்கித்தொழில் முறைமையொன்றையும் 20% சட்டநியதி ஒதுக்கு விகிதத்தில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளை கருதுக. பொதுமக்களிடமிருந்ததான ரூபா 3000 மில்லியன் வைப்புக்களையும் அவை கொண்டிருக்கின்றன. மொத்த பணநிரம்பல் (M_1) ரூபா 4200 மில்லியனாகும்.

i) வங்கிகள் கொடுத்துள்ள கடன்களின் தொகை எவ்வளவு?

.....

.....

ii) பொதுமக்கள் தாம் வைத்திருக்கும் பணத்தாள்கள், குற்றிகள் என்பவற்றில் ரூபா 200 மில்லியன் வைப்புச் செய்துள்ளனர் எனக் கருதுக. வங்கிகள் தமது இறுதி கடன் கொடுத்தலை செம்மையாக்கும் பொழுது மொத்த வைப்புக்களுக்கு என்ன நிகழும் என விளக்குக?

.....

.....

.....

.....

iii) அனைத்து செம்மையாக்கங்களும் செய்யப்பட்டன்பின்னர் பணநிரம்பலின் பெறுமதி யாது?

.....

.....

ஆ) உருவாக்கப்பட்ட கடன்தொகையானது நடைமுறையில் வைப்புப் பெருக்கி கருதுவதிலும் பார்க்க ஏன் குறைவாகவிருக்கும் என விளக்குக.

.....

.....

.....

.....

.....

Q3.

வங்கி முறைமையொன்றின் கருதுகோள்ரீதியான ஐந்தொகையொன்று கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது.

பொறுப்புக்கள்	(ரூபா மில்லியனில்)	சொத்துக்கள்	(ரூபா மில்லியனில்)
கேள்வி வைப்புக்கள்	8000	ஒதுக்குகள்	1200
		கடன்கள்	6800
	8000		8000

இவ்வங்கி முறைமையின் சட்டப்படியான ஒதுக்குவீதம் 10% ஆகும் எனக் கொள்க. இப் பொருளாதாரத்தில் பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தின் அளவு 6000 மில். ரூபாவாகும்.

i) பணநிரம்பல் எவ்வளவு?

.....

.....

ii) கடனாக்கச் செயற்பாடு பூர்த்தியடையும்போது இப் பொருளாதாரத்தின் பணநிரம்பலின் அதி உச்ச அளவைக் கணிப்பிடுக?

.....

.....

.....

.....

iii) பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தின் அளவு மாறாதநிலையில் சட்டப்படியான ஒதுக்குவீதம் 12.5% ஆக உயர்த்தப்படின் பூரண கடனாக்கத்தின் பின்னர் நிலவக்கூடிய மொத்த பணநிரம்பலின் அதி உச்ச அளவினைக் கணிப்பிடுக.

.....

.....

.....

* வங்கித் தொழில்துறையிலான இடர் நேர்வுகள்

1. கொடுகடன் இடர் நேர்வு
2. சந்தை இடர் நேர்வு
3. திரவத்தன்மை இடர் நேர்வு
4. தொழிற்பாட்டு இடர் நேர்வு

4. மத்திய வங்கி

2002ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நாணயச் சட்டத்தின்படி இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்கள்

1. **விலை மற்றும் பொருளாதார உறுதி நிலையை பேணல்.**
   பொதுவிலை மட்டத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி அதனை நிலையாக வைத்திருத்தல் விலை உறுதி எனப்படும். மெய் வெளியீட்டினை அதிகரித்து தொழில் வாய்ப்பை அதிகரித்தல் பொருளாதார உறுதி எனப்படும்.
2. **நிதி முறைமையின் உறுதி நிலையை பேணல்.**
   நிதிசார் இடையீட்டு நடவடிக்கை செயற்பாடுகளில் மெய்ப்பொருளாதாரத்தில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது இருத்தலை நிதிமுறைமையின் உறுதி என்பர்.
   (பொருளாதார, நிதி, அரசியல் மற்றும் ஏனைய துறைகளில் தோன்றும் அக/புற அதிர்ச்சிகளுக்கு மத்தியில் தடுமாற்றம் இல்லாமலிருக்கும் ஆற்றலை நிதி முறையின் உறுதி என்பர்).

இலங்கை மத்தியவங்கியின் பிரதான கருமங்கள்

1. நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.
2. நாணயமாற்று விகித கொள்கையை நடைமுறைப்படுத்தல்.
3. இலங்கையிலுள்ள உத்தியோகபூர்வ ஒதுக்குகளை முகாமை செய்தல்.
4. புழக்கப் பணத்தினை வெளியீடு செய்தல்.
5. அரசாங்கத்தின் வங்கியாக, ஆலோசகராகவும், நிதிமுகவராகவும் தொழிற்படல்.
6. வங்கி, நிதிக்கம்பனிகள் மற்றும் அரசாங்கத்தின் பிணையகங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முதல்நிலை வணிகர்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், நிர்வகித்தல் மற்றும் கண்காணித்தல்.
7. மத்திய வங்கியில் தீர்ப்பனவுக் கணக்குகளை வைத்துள்ள நிதி நிறுவனங்களுக்கு தீர்ப்பனவு வசதியை வழங்குதல்.

நாணயக் கொள்கை (பணக்கொள்கை / நிதிக் கொள்கை)

பொருளாதார, விலை உறுதிப்பாடு மற்றும் நிதிக் கொள்கையின் நிலைபேறு ஆகிய நோக்கங்களை அடைவதற்காக பண நிரம்பல் மற்றும் வட்டி வீதம் போன்றவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்காக பணக்கருவிகளை செயற்படுத்தும் செயற்பாடு நாணயக் கொள்கை எனப்படும்.

இலங்கை மத்தியவங்கியானது பணக்கொள்கையை நடைமுறைப்படுத்த தெரிவு செய்துள்ள இலக்கு மாறிகள்

1. செயற்பாட்டு இலக்கு - சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீக்கம்.
2. இடையீட்டு இலக்கு - விரிந்த பண நிரம்பல்.
   (வெளிப்படுத்தும் இடைநிலை மாறி)
3. இறுதி இலக்கு - பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு.



நாணயக் கொள்கையின் கருவிகள்

1. தொகைரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள்
   i. கொள்கைரீதியான வட்டி வீதங்கள்
      a. வங்கி வீதம்
      b. மீள் கொள்வனவு வீதம் (துணை நில்வைப்பு வீதம்)
      c. நேர் மாற்று மீள் கொள்வனவு வீதம் (துணை நில்கடன் வழங்கல் வீதம்)
   ii. பகிரங்கச் சந்தை நடவடிக்கைகள்
   iii. சட்டரீதியான ஒதுக்கு வீதம்
2. பண்புரீதியான கடன் கட்டுப்பாட்டு கருவிகள்
   i. கடன் எல்லையைத் தீர்மானித்தல்
   ii. கடன்களுக்கான பிணைகளை தீர்மானித்தல்.
   iii. தெரிவு செய்யப்பட்ட வட்டி வீதங்களை நிர்ணயித்தல்.
   iv. நல்வழிப்படுத்தல்.
   v. மீள் நிதியிடல் வசதிகள்

கொள்கை வட்டி வீதம்

நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்த மத்திய வங்கியினால் கைக்கொள்ளப்படும் வட்டி வீதங்களை கொள்கை வட்டி வீதங்கள் என்பர். அவை வருமாறு :

1. வங்கி வீதம்
2. மீள் கொள்வனவு வீதம் (துணை நில் வைப்பு வீதம்)
3. நேர் மாற்று மீள் கொள்வனவு வீதம் (துணைநில் கடன் வழங்கல் வீதம்)

இவை மத்திய வங்கியினால் வணிக வங்கிகளுடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் போதே பயன்படுத்தப்படுகின்றது.

ii) மத்தியவங்கியின் துணைநில் வைப்பு வீதம் (SDFR) என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

.....
.....
.....
.....
.....

iii) மத்தியவங்கியின் துணைநில் கடன் வழங்கல் வீதம் (SLFR) என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

.....

.....

.....

.....

ii) வங்கி வீதம் (Bank Rate) என்றால் என்ன?

- மத்தியவங்கியினால் வணிக வங்கிகளுக்கு வழங்கப்படும் கடன்கள் மீது அறவிடப்படும் வட்டி வீதத்தை வங்கி வீதம் என்பர். திரவப் பிரச்சினைக்குட்படும் வணிக வங்கிகளுக்கு மத்திய வங்கி இறுதிக்கடன் ஈவோனாக கடன் வழங்கும்போது அறவிடப்படும் வட்டி வீதத்தை வங்கி வீதம் என்பர்.
- வங்கிவீதத்தை அடிப்படையாகக் கொண்டுதான் வணிக வங்கிகளும் தாம் வழங்கும் கடன்களுக்கான வட்டி வீதத்தை தீர்மானிக்கும்.
- வங்கி வீதம் அதிகரித்தல் ⟶ வணிக வங்கிகளின் கடன்களுக்குரிய வட்டிவீதம் அதிகரிக்கும் ⟶ கடனின் செலவு கூடும் ⟶ கடன்களுக்கான கேள்வி குறையும் ⟶ கடனாக்கம் கட்டுப்படும் ⟶ பண நிரம்பலில் ஏற்படும் விரிவு குறையும் ⟶ பொதுவிலை மட்ட அதிகரிப்பு கட்டுப்படுத்தப்படும்.

  (வங்கி வீதம் குறைந்தால் மேலே கூறப்பட்ட செயற்பாடுகள் மறுதலையாக இடம்பெறும்)

பகிரங்கச் சந்தை நடவடிக்கை
(Open market operation)

- பணச்சந்தையின் திரவத்தன்மையிலும், வட்டி வீதத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அரச ஆவணங்கள், பிணைகளை மத்திய வங்கி விற்பனை மற்றும் கொள்வனவு செய்யும் செயற்பாட்டை பகிரங்கச் சந்தை நடவடிக்கை என்பர். இதன் நோக்கங்கள் இரண்டாகும்.

1. வட்டிவீதம் பற்றி உச்ச வரையறையை நிச்சயிப்பதற்காக பயன்படுத்தல். (வட்டி வீதத்திற்கும், பிணைப்பத்திரங்களின் விலைக்கும் இடையே எதிர்தொடர்பு இருப்பதால் வட்டி வீதத்தைக் குறித்த அளவுக்கு மேல் உயர்த்த முடியாது)
2. வணிக வங்கிகளின் புழக்கப் பண ஒதுக்கை மாற்றி பணநிரம்பலின் தாக்கத்தை ஏற்படுத்துதல்.
   - விற்பனை நிகழ்வின்போது பண நிரம்பல் குறையும்.
   - கொள்வனவின்போது பண நிரம்பல் அதிகரிக்கும்.

M.C.Q

01. பின்வருவனவற்றுள் கேள்வித்தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அம்சமாக எதனைக் குறிப்பிடுவீர்?

1. மத்திய வங்கியின் சட்டப்படியான காசு ஒதுக்கவீதம் உயர்த்தப்படல்
2. மத்திய வங்கியின் பகிரங்கச் சந்தையில் ஆவணங்களை விற்பனை செய்தல்
3. மத்திய வங்கியின் பகிரங்கச் சந்தையில் ஆவணங்களை கொள்வனவு செய்தல்
4. மீள்கொள்வனவு வீதமும், நேர்மாற்று மீள்கொள்வனவு வீதமும் உயர்த்தப்படல்
5. மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் உயர்த்தப்படல். (.....)

02. பின்வருவனவற்றில் எது செலவுத்தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தும்

1. வேலையில்லாப் பிரச்சனை குறைதல்
2. வணிக வங்கிகளின் நுகர்வுக்கடன் வழங்கலை அதிகரித்தல்
3. மத்திய வங்கி பிணையங்களை விற்பனை செய்தல்
4. மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கான ஒதுக்குத் தேவையினைக் குறைத்தல்
5. தொழிற்சங்க போராட்டத்தினால் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு

(.....)

03. பொது விலைமட்ட உயர்வு ஒன்று தொடர்பாகத் தவறான கூற்று எது?

1. பணத்தின் கொள்வனவு சக்தி வீழ்ச்சியடையும்
2. வாழ்க்கைச் செலவு அதிகரித்து வாழ்க்கைத்தரம் குறைவடையும்
3. ஊழியர்களின் மெய்க்கூலி வீழ்ச்சியடையும்
4. நுகர்வுச் செலவு கூடி சேமிப்பு மட்டம் குறைவடையும்
5. பணத்தின் கொள்வனவுச் சக்தி உயர்வடையும். (.....)

04. பணவீக்கமின்மை (disinflation) என்பதனால் கருதப்படுவது

1. பொதுவிலைமட்டத்திலேற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பு
2. பொதுவிலைமட்டத்திலேற்படும் தொடர்ச்சியான வீழ்ச்சி
3. பொதுவிலைமட்டத்தின் அதிகரிப்பு வீதம் வீழ்ச்சியடைதல்
4. பொதுவிலைமட்டமானது பல வருடங்களுக்கு நிலையானதாகக் காணப்படல்
5. பணவீக்கத்தின் அளவானது எல்லா வருடங்களுக்கும் சமமாகக் காணப்படல்.

(.....)

05. இலங்கையில் பணவீக்கத்தினை அளவிடுவதற்கு பயன்பாட்டிலில்லாத விலைச்சுட்டி எது?

1. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்
2. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்
3. உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்
4. மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி
5. கொழும்பு பெரும்பாக நுகர்வோர் சுட்டெண்

(.....)

06. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 373 பொருட்களின் விலைகளினை கருத்தில் எடுத்து கணிக்கப்படுகின்றது. அச் சுட்டெண்களுக்குள் உணவு மற்றும் மதுசாரமற்ற குடிவகைகளின் நிறை எத்தனை சதவீதமாகவுள்ளது?

1. 41.0 2. 44.0 3. 23.7 4. 18.0 5. 12.3

(.....)

07. 2013ம் ஆண்டினை அடியாண்டாகக் கொண்டு இலங்கை குடிசன மதிப்பீட்டு திணைக்களத்தினால் அளவிடப்படுகின்ற நுகர்வோர் விலைச்சுட்டி எது?

1. கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்
2. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்
3. உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்
4. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்
5. மாவட்ட அடிப்படையிலான நுகர்வோர் விலைச்சுட்டெண்

(.....)

08. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டியின் படி மையப்பணவீக்கத்தினை அளவிடும்போது நீக்கப்பட்ட பொருட்தொகுதி எது?

1. பெற்றோலியப் பொருட்கள்
2. வலுவும் உணவு வகைகளும்
3. கடலுணவுகளும் வலுவும்
4. மரக்கறிகளும் கடலுணவும்
5. மின்சாரமும் மரக்கறிகளும்

(.....)

09. குறிப்பிட்ட பொருளாதாரமொன்றின் நடைமுறை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1500 மில்லியன் ரூபா ஆவதுடன் பணச்சுற்றோட்டம் 75 ஆகும். விலைமட்டம் 25 ஆகக் காணப்பட்டால் பண நிரம்பலும் மெய் உற்பத்தியும் முறையே

1. 3உம் 60உம் ஆகும்
2. 10உம் 30உம் ஆகும்
3. 20உம் 60உம் ஆகும்
4. 30உம் 375உம் ஆகும்
5. 60உம் 375உம் ஆகும்

(.....)

10. பொருளாதாரமொன்றில் வெளியீட்டின் அளவு வருடாந்தம் 2% இனால் அதிகரிக்கும் அதேவேளை பணத்தின் அளவு 5% இனால் உயர்கிறது. பணத்தின் புழக்கச் சுற்றோட்ட வேகம் மாறாதாயின் விலைமட்டத்தில் ஏற்படும் அண்ணளவான அதிகரிப்பு யாது? தேசிய வெளியீட்டின் பணப் பெறுமதியின் அதிகரிப்பு யாது?

	விலை மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு	தேசிய வெளியீட்டின் பணப் பெறுமதியின் அதிகரிப்பு
1.	2%	5%
2.	2%	7%
3.	2.5%	10%
4.	3%	5%
5.	3%	7%

(.....)

11. பின்வருவனவற்றுள் மிகவும் குறைந்த திரவத் தன்மையைக் கொண்ட சொத்து எது?

1. 1000 ரூபா தாள் நாணயம்
2. திறைசேரி உண்டியல்
3. 10 ரூபா குற்றி நாணயம்
4. மாடிவீடு
5. திறைசேரி முறிகள்

(.....)

12. பணத்தின் உத்தேச நோக்கக் கேள்விக்கு அடிப்படையான பணத்தின் தொழிற்பாடு எது?

1. பரிமாற்று ஊடகம்
2. பெறுமானத் திரட்டு
3. பெறுமானத்தை அளவிடும் அளவுகோல்
4. கணக்கீட்டு அலகு
5. பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமம்

(.....)

13. பின்வருவனவற்றில் எதனை அண்மிய பணமாகக் கருதுவீர்?

1. பொதுமக்கள் வசமுள்ள நாணயங்கள்
2. பொதுமக்களின் பெயரில் வர்த்தக வங்கிகளிலுள்ள கேள்வி வைப்புகள்
3. பொதுமக்களின் பெயரில் சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளிலுள்ள சேமிப்பு, தவணை வைப்புகள்
4. திறைசேரி முறிகளும் ரூபாய் பிணைகளும்
5. வர்த்தக வங்கிகளிடமுள்ள ஒதுக்குகள்

(.....)

14. ஒரு நாட்டின் பண நிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பு பின்வருவனவற்றுள் எந்த விளைவினை ஏற்படுத்தும்?

1. பணத்தின் உத்தேச நோக்கம் கேள்வியை குறைக்கும்
2. முதலீடுகளை அதிகரித்து மொத்தக் கேள்வியை குறைக்கும்
3. வட்டி வீதத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தி முதலீட்டினையும் அதிகரிக்கும்.
4. பணத்தின் கொள்வனவு சக்தியை குறைக்கும்.
5. வட்டி வீதத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தி முதலீட்டினை அதிகரிக்கச் செய்யும்.

(.....)

15. பின்வருவனவற்றுள் எது ஒதுக்குப் பணத்தில் அதிகரிப்பை ஏற்படுத்த வல்லது?

1. பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயத்தின் அளவில் ஏற்படும் வீழ்ச்சி
2. வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயத்தின் அளவில் ஏற்படும் வீழ்ச்சி
3. வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி வழங்கிய கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு
4. மத்திய வங்கி அரசுக்கு வழங்கிய கடன்களில் ஏற்பட்ட வீழ்ச்சி
5. மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புகளில் ஏற்பட்ட வீழ்ச்சி

(.....)

16. திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பலுக்குள் ($M2_b$) உள்ளடக்கப்படாத விடயம் எது?

1. பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயம்
2. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளில் உள்ள பொதுமக்களின் சேமிப்பு வைப்புகள்
3. சீரமைக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்கள்
4. வர்த்தக வங்கிகளில் பொது மக்களால் வைத்திருக்கப்படும் கேள்வி வைப்புகள்
5. வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் தவணை மற்றும் சேமிப்பு வைப்புகள்

(.....)

17. பின்வருவனவற்றுள் எது ஒரு நாட்டின் பணப் பெருக்கியின் பெறுமதியை அதிகரிக்கச் செய்யும்?

1. சட்டப்படியான ஒதுக்கு வீதத்தினை அதிகரித்தல்
2. வணிக வங்கிகளின் மிகை ஒதுக்கு வீழ்ச்சி அடைதல்
3. நாணய வைப்பு வீதத்தில் ஏற்படும் அதிகரிப்பு
4. வணிக வங்கிகளின் மிகை ஒதுக்கு அதிகரித்தல்
5. பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தின் அளவில் ஏற்படும் அதிகரிப்பு

(.....)

18. பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பணப்பெருக்கலைக் கணிக்க

வைப்புக்களுக்கான நாணய விகிதம்	50%
தேவையான ஒதுக்கு விகிதம்	10%
மேலதிக ஒதுக்கு விகிதம்	5%
பணத்தின் சுழற்சி வேகம்	2.5%

1. 3.0 2. 2.3 3. 2.75 4. 4.5 5. 2.5

(.....)

19. கெயின்ஸியக் கோட்பாட்டின் படி பின்வருவனவற்றில் எச்சந்தர்ப்பத்தில் பணத்திற்கான கேள்வியில் ஒரு அதிகரிப்பு ஏற்படும்?

	மெய்வருமானம்	விலைமட்டம்	வட்டிவீதம்
1.	அதிகரிப்பு	வீழ்ச்சி	அதிகரிப்பு
2.	மாறாது	மாறாது	அதிகரிப்பு
3.	அதிகரிப்பு	அதிகரிப்பு	வீழ்ச்சி
4.	மாறாது	வீழ்ச்சி	வீழ்ச்சி
5.	வீழ்ச்சி	மாறாது	அதிகரிப்பு

(.....)

20. பணத்திற்கான உத்தேச நோக்கக் கேள்வியினால் கருதப்படுவது.

1. கொடுக்கல் வாங்கல் நோக்கத்திற்காக நபரொருவர் பணத்தைத் தன்னிடம் வைத்திருப்பார் என்பதாகும்.
2. வட்டிவீதம் அதிகரிக்கும்போது பணத்திற்கான கேள்வி அதிகரிக்கும் என்பதாகும்.
3. பொருளாதாரத்தில் நிச்சயமற்ற தன்மை அதிகரிக்கும்போது மனிதர்கள் பெரும்பாலும் பணத்தைத் தம்மிடம் வைத்திருப்பதை விரும்புவர் என்பதாகும்.
4. பணத்தின் சுற்றோட்ட வேகம் நிலையானது என்பதாகும்.
5. வட்டிவீதம் வீழ்ச்சியடையும்போது பணத்திற்கான கேள்வி அதிகரிக்கும் என்பதாகும்.

(.....)

21. வணிக வங்கிக் கட்டமைப்பிலுள்ள குறிப்பிட்ட வங்கியொன்றிடம் ரூபா 5000 மில்லியன் வைப்புகளும் 700 மில்லியன் ஒதுக்கீடுகளும் காணப்படுகின்றது. இந் நிலையில் பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தில் 200 மில்லியன் அவ்வங்கியில் வைப்பிலிடுவதாகக் கருதுக. இந் நிலையில் அவ்வங்கி 10% ஒதுக்கில் தொழிற்பட்டால் அங்கு காணப்படும் மிகை ஒதுக்கு எவ்வளவு?

1. 400 மில்லியன் ரூபா 2. 500 மில்லியன் ரூபா 3. 900 மில்லியன் ரூபா
4. 480 மில்லியன் ரூபா 5. 380 மில்லியன் ரூபா

(.....)

22. பின்வருவனவற்றுள் எது வணிக வங்கியின் ஐந்தொகையில் பொறுப்பாகக் கருதப்படும்?

1. வணிக வங்கியின் கையிலுள்ள பணம்
2. உள்நாட்டு வங்கிகளிலிருந்து வரவேண்டிய நிலுவை
3. மத்திய வங்கியிலிருந்து வரவேண்டிய நிலுவை
4. செலுத்தப்பட்ட மூலதனமும் ஒதுக்க நிதிகளும்
5. செலுத்தப்பட்ட மூலதனமும் வணிக வங்கியின் கையிலுள்ள பணமும்.

(.....)

23. குறிப்பிட்ட பொருளாதாரம் ஒன்றின் நிதி தொடர்பான சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அனைத்துப் பெறுமதிகளும் பத்து இலட்சம் ரூபாய்கள் ஆகும்.

பொதுமக்களின் புழக்கத்தில் உள்ள பணம்	600
வணிக வங்கிகளிலுள்ள உள்ள புழக்கப் பணம்	200
பொதுமக்கள் பெயரிலுள்ள மொத்த வைப்புக்கள்	1000
சட்டரீதியான ஒதுக்கு வீதம்	10%

வணிக வங்கிகளிலுள்ள பொதுமக்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் 400

மேலுள்ள தகவல்களின்படி பொருளாதாரத்தில் ஒதுக்குப்பணம், குறுகிய பண நிரம்பல் அடிப்படையான பணப்பெருக்கி என்பவற்றைச் சரியாகக் காட்டும் விடை எது?

ஒதுக்குப்பணம்	பணப்பெருக்கி
(1) 800	1
(2) 900	1.33
(3) 900	1.77
(4) 1200	1.16
(5) 1800	1.33

(.....)

24. பின்வரும் வணிக வங்கிகளின் சொத்துக்கள் கூடிய திரவத்தன்மையைக் கொண்ட சொத்து எது?

1. வங்கியில் வழங்கப்பட்ட கடன்கள்
2. திறைசேரி உண்டியல்கள்
3. வியாபார உண்டியல்கள்
4. அடகு முற்பணங்கள்
5. மத்திய வங்கியிலுள்ள வைப்புக்கள்

(.....)

25. மத்திய வங்கியானது ரூபா 400 மில்லியன் பெறுமதியான அரச முறிகளைப் பொதுமக்களிடமிருந்து கொள்வனவு செய்வதாகக் கருதுக. தேவைப்படும் ஒதுக்கு வீதம் 20% ஆயின் பண நிரம்பலில் ஏற்படும் உச்ச அதிகரிப்பு.

1. ரூபா 1600 மில்லியன்
2. ரூபா 1800 மில்லியன்
3. ரூபா 2000 மில்லியன்
4. ரூபா 2200 மில்லியன்
5. ரூபா 2400 மில்லியன்

(.....)

26. இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் நாணயக் கொள்கையின் இறுதிக்குறிக்கோள் யாது?

1. வருமான ஏற்றத்தாழ்வை நீக்குதல்
2. விலை உறுதியைப் பேணுதல்
3. நிதியியல் முறை உறுதியைப் பேணுதல்
4. உள்ளக வெளியகச் சமநிலையை பேணுதல்
5. விலை மற்றும் பொருளாதார உறுதியை பேணுதல்

(.....)

27. நாணயக் கொள்கையின் கொள்கை வட்டி வீதத்திற்குள் உள்ளடங்கும் விடயம் ஒன்று.

1. பகிரங்க சந்தை நடவடிக்கை
2. நியதி ஒதுக்கு வீதம்
3. தெரிவு செய்யப்பட்ட கடன்களுக்குரிய வட்டிவீதம்
4. துணை நில் வைப்புவீதம்
5. மீள் நிதியிடல் வசதி

(.....)

28. மத்திய வங்கியினால் அரசாங்கப் பிணையங்களை (securities) வணிக வங்கிகளுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கை.

1. வட்டிவீத வீழ்ச்சிக்கு ஏதுவாகும்.
2. வணிக வங்கிகளின் காசொதுக்குகள் வீழ்ச்சியடைய ஏதுவாகும்.
3. பண நிரம்பல் அதிகரிக்க ஏதுவாகும்.
4. வணிக வங்கிகளால் பொதுமக்களுக்கு வழங்கும் கொடுகடன்கள் அதிகரிக்க ஏதுவாகும்.
5. வணிக வங்கிகளின் காசொதுக்குகள் அதிகரிக்க ஏதுவாகும்.

(.....)

29. பணக் கொள்கைக்கருவிகள் மூன்று அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. இம்மூன்றும் பொருளாதாரத்தைச் சுருங்கச்செய்யப் பயன்படுத்தப்படுமாயின் பின்வரும் எந்தச் சேர்க்கையினால் அது சாத்தியமாகும்?

	வட்டி வீதம்	திறந்த சந்தை நடவடிக்கை	நியதி ஒதுக்குத் தேவை
1.	அதிகரிப்பு	ஆவணங்களை விற்றல்	அதிகரிப்பு
2.	அதிகரிப்பு	ஆவணங்களை விற்றல்	குறைப்பு
3.	அதிகரிப்பு	ஆவணங்களை வாங்குதல்	அதிகரிப்பு
4.	குறைப்பு	ஆவணங்களை வாங்குதல்	அதிகரிப்பு
5.	குறைப்பு	ஆவணங்களை வாங்குதல்	குறைப்பு

(.....)

30. சகல வங்கிகளும் சட்டத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட குறைந்த பட்ச ஒதுக்குகளை மட்டுமே பேணுவதாகவும் பண ஒழுங்குகள் (currency drains) எதுவும் இல்லை எனவுங் கருதுக. சட்ட ரீதியான ஒதுக்குத் தேவை 10 சதவீதமகும். நிமலன் என்பவர் தனது பாட்டனாரிடமிருந்து பிறந்தநாள் பரிசாகக் கிடைத்த 5000 ரூபாத் தாளினை அவரது நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்வாராயின் மொத்தப் பணநிரம்பலில் ஏற்படும் அதிகூடிய அதிகரிப்பு.

1. ரூபா 500 ஆகும்.
2. ரூபா 2500 ஆகும்.
3. ரூபா 5000 ஆகும்.
4. ரூபா 45000 ஆகும்.
5. ரூபா 50000 ஆகும்.

(.....)

***

DCM சுன்னாகம்

கலை வர்த்தக தொழிநுட்ப பிரிவுகளுக்கான
தனித்துவமான நிறுவனம்

பொருளியல்
S.ஜெயகுமார்
(B.A(Hons) ECO SPl, M.A.in Eco, P.G.D.E)

கணக்கீடு
A.T.சுரேன் (HNDA)

வணிகக்கல்வி
V.முரளி BBA (Fm.Spl)

தாயகம் டிஜிற்றல்
-யாழ்.பல்கலைக் கழகம் அருகில்-